# 25.PUZZLE PROBLEMS

21. திருமணமான ஒருவருக்கு, 4 திருமணமான மகன்களும், ஒவ்வொரு மகனுக்கும் 3 குழந்தைகளும் உள்ளனர்.எனில் அக்குடும்பத்தில் உள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை ?

1) 22 2) 20 3) 21 4) 23

22. ஒரு மருத்துவர், ஒரு நோயாளியிடம் 5 மாத்திரைகளைக் கொடுத்து ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கும் ஒரு மாத்திரையை விழுங்கக் கூறினார். அந்நோயாளி 9.00 am-க்கு முதல் மாத்திரையை எடுத்துக்கொண்டால், எத்தனை மணிக்கு கடைசி மாத்திரையை உட்கொள்வார்?

1) 12 noon 2) 5 p.m

3) 6 p.m 4) 7 p.m

23. ஆங்கில எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டால், வலமிருந்து 20-வது எழுத்திற்கு இடதுபுறமாக 4வதாக அமையும் எழுத்து?

1) P 2) Q
3) X 4) V

24. 10.கி.மீ தூரம் கொண்ட ஒரு சாலையில் 500 மீட்டர் இடைவெளிகளில் தூண்கள் எழுப்பப்படுகிறது. எனில் அச்சாலையில் எழுப்பப்படும் தூண்களின் எண்ணிக்கை எத்தனை?

1) 20 2) 21 3) 19 4) 22

25. 1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 என்ற எண்ணை 4-ஆல் வகுக்கும்போது கிடைக்கும் மீதி.

1) 0 2) 1 3) 2 4) 3

26. கீழ்க்கண்ட கழித்தல் கணக்கில், எந்த எண் More என்ற வார்த்தையைக் குறிக்காதது?

```
  MOR
- ORE
-----
  222
-----
```

1) 8640 2) 6420
3) 7531 4) 9753

27. ஒரு வாத்திற்கு முன்னால் இரு வாத்துக்கள் உள்ளன. ஒரு வாத்திற்கு பின்னால் இரு வாத்துக்கள் உள்ளன.இரு வாத்துக்களுக்கு நடுவில் ஒரு வாத்து உள்ளது.எனில் அங்குள்ள குறைந்தபட்ச வாத்துக்களின் எத்தனை?

1) மூன்று 2) நான்கு 3) ஐந்து 4) ஏழு

28.ஒருவன் பறவை வேட்டையாடி விட்டு வருகிறான்.அவன் தன்னுடைய பையில் எவ்வளவு பறவைகள் உள்ளன என்று கூறினான்.அவன் 'They are all sparrows but six;all pigeons but six;and all doves but six என்று கூறினான்.எனில்,அவனிடம்

உள்ள பறவைகள் எத்தனை?

1) 18 2) 9 3) 126 4) 36

29. ஒரு கருத்தரங்கில் பங்கேற்ற பத்து நபர்களும் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டால், எத்தனை முறை கைகுலுக்கள்கள் அங்கு நடைபெற்றிருக்கும் ?

1) 20 2) 45 3) 55 4)90

30. ஒரு குடும்பத்தில் ஒரு குடும்பத்தலைவர், அவருடைய மனைவி,மூன்று மகன்கள் மற்றும் அவர்களுடைய மனைவிகள் உள்ளனர். ஒவ்வொரு மகனுக்கும் இரு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். எனில், அக்குடும்பத்தில் ஆண்கள் எத்தனை பேர்?

1) 4 2) 10 3) 8 4) 12